1979 பிப்ரவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 137-ஆ வினாவையும் இதோடு ஒட்டி எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

*வினா எண் 137-ஆ.— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1977–78 ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். பரிட்சைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே,

1977–78 ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்./ஐ.பி.எஸ். பரிட்சைகளில் தேர்தெடுக்கப்பட்டவர்களுள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை முறையே 15ம், 4-ம் ஆகும்.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படக்கூடிய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் தேர்வில் வெற்றி பெறுவதற்காகப் தமிழ்நாடு அரசால் பயிற்சி வகுப்புகள் கூட நடத்தப்படுகிறது. அப்படியும் இந்த எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அதற்கான காரணத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது.

[முற்பகல் 9-10].

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, 1977–78 ஆம் ஆண்டில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பதவிகளுக்குத் தமிழ்நாட்டில் தேர்வு பெற்றவர்கள் 15 பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது கடந்த ஆண்டில் இருந்ததை விட குறைவா, அதிகமா ? குறைவு என்றால் அதற்குக் காரணம் என்ன? குறைவை நிவர்த்திக்க இந்த அரசு ஏதாவது விசேஷ முயற்சி எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் ஏற்கனவே தெரிவித்தேன், ஏன் குறைகிறது என்பதைப் பற்றிக் காரணம் எனக்குத் தெரியாது, என்று. ஆனால் 1977–78 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள், தாழ்த்தப்பட்டவர்கள் உள்பட, தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 15 பேர்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்த ஐ.பி.எஸ். அதிகாரிகள் மாநில அரசின்கீழ் வேலையில் அமர்த்தப்படுகிறார்களா ? அல்லது மத்திய அரசின்கீழ் வேலையில் அமர்த்தப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் என்றால் இந்தியன் அட்மினிஸ்டிரேடிவ் சர்வீஸ், இந்தியன் போலீஸ் சர்வீஸ் என்பது உறுப்பினருக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைரவர்களே, ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, தமிழகத்தில், முந்தைய ஆண்டுகளை விட வர வரக் குறைவானது என்ற கருத்தோட்டம் இருக்கிறது. அதற்குக் காரணம், கல்வியின் தரம் போதிய அளவு இல்லையென்றும் மக்களிடையே பரவலாகப் பேசப்படுகிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் காரணம் தெரியாது என்று சொன்னார்கள். ஆனால், பொறுப்புள்ள நமது அரசு, பிற்பட்ட மக்களை முன்னேற்றுகின்ற அளவுக்கு, அதற்கென தனியாக ஹாஸ்டல்களை வைத்து, கோச்சிங் கொடுக்க, இன்னும் அவர்களை முன்னுக்குக் கொண்டுவர சரியான முயற்சி எடுக்குமா என அறியவிரும்புகிறேன். அத்துடன் இன்னும் ஒன்று. பிற்பட்ட வகுப்பினரில் மெஜாரிட்டி கம்யூனிட்டிஸ்—க்கு—எல்லா உத்தியோகங்களிலும்—மாநில சர்வீஸ் உட்பட, போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வில்லையென்ற நிலையிருக்கிறதே அதனை நிறைவு செய்கிற அளவுக்கு அரசு முயற்சி எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏன் ஐ. ஏ. எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கை குறைகிறது என்ற கேள்வி கேட்டபொழுது எனக்குக் காரணம் புரியாது என்றேன். விவரம் புரிந்த கந்தசாமி அவர்கள் அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, கல்வியின் தரம் குறைவாக இருக்கிற காரணத்தாலே என்று பரவலாகப் பேசப்படுகிற காரணத்தாலே, அந்தக் கல்வியின் தரத்தை உயர்த்தி அதன் மூலம் எண்ணிக்கையை உயர்த்த ஆவன செய்ய இயலுமா என்ற அருமையான யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பிந்தங்கியவர்கள் எவ்வளவு பேர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர்கள் ?

மாண்புமிகு திரு. கி. மனோர்கரன் : நான் ஏற்கனவே பதில் சொன்னேன். திரு. கணேசன் மீண்டும் ஒரு முறை கேட்க வேண்டுமென்பதாக இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். **1977–78-ல்** ஐ.ஏ.எஸ். பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்

1979 பிப்ரவரி 22]

கள்—தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 15 பேர்கள். அந்த 15 பேர்களில் 4 பேர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

சிதம்பரம் துணைக் கருவூலம்.

* வினா எண். 121—திரு. துரை கலியமுர்த்தி : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட விைாவுக்கு விடையளிப்பாரா —

சிதம்பரம் துணைக் கருவூலப் பணிகள்ஸ்டேட் பாங்க் மூலம் நடத்தப்படுவதற்கு மாத கமிஷன் தொகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : கமிஷன் தொகை ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 122-ம், 123-ம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

சோளிங்கபுரம் தாயார் சன்னதி திருப்பணி.

*வினா எண். 124—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வடாற்காடு மாவட்டம், சோளிங்கபுரம் பழைய தாயார் சன்னதி கோயிலை புதுப்பிக்க அரசு அளித்த மான்யத் தொகை எவ்வளவு ?

(ஆ) தனிப்பட்டவர்கள், மடங்கள் அறநிலையத் துறையின் மூலமாக நிதி உதவி செய்துள்ளார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) வடாற்காடு மாவட்டம், சோளிங்கபுரம் பழைய தாயார் சன்னதி கோயிலைப் புதுப்பிக்க அரசு இதுவரை எவ்வித மானியமும் அளிக்கவில்லை.

(ஆ) அறநிலையத் துறை மூலம் நிதியுதவி ஏதும் இதுவரை அளிக்கப்படவில்லை. ஆனால் தனிப்பட்ட ஒருவரிடமிருந்தும் மடாதிபதி ஒருவரிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் நிதி உதவி பெறப்பட்டுள்ளது.